ஆதிதிராவிடர் நலத்துறை

அனுப்புநர்:
திரு.தங்க கலியபெருமாள்.இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஆதிதிராவிடர் நலம்,
சென்னை–5.

பெறுநர்:
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
தூத்துக்குடி மாவட்டம்.

ந.க.எண்.இ2/40490/07, நாள்.03/01/08.

பொருள் ஆதிதிராவிடர் நலம்–பணியாளர் தொகுதி–தூத்துக்குடி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நல அலுவலகம்–மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலக உதவி கணக்கு அலுவலர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நல அலுவலக உதவி கணக்கு அலுவலராக முழு கூடுதல் பொறுப்பு வகித்தல்–தொடர்பாக.

பார்வை தங்கள் கடித எண்.AW4/41306/07, நாள்.14/11/07.

பார்வையில் காணும் கடிதம் தொடர்பாக கீழ்க்கண்ட விளக்கம் அளிக்கப்படுகிறது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை விதிகளில் பின் இணைப்பு–2ல் பகுதி–1ல் பத்தி–17ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளில் "Collectors of Districts are empowered to appoint a Govt Servant under their control to hold full additional Charge of the posts in respect of which the collectors of Districts are the appinting Authorities and to Sanction additional pay to them subject to the conditions prescribed in Rule 49" என உள்ளது.

இதன்படி, தூத்துக்குடி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் காலியாக உள்ள உதவி கணக்கு அலுவலர் பணியிடத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலக உதவி கணக்கு அலுவலரை கூடுதல் பொறுப்பில் வைக்க வேண்டுமென்றால் உதவி கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு, ஆட்சியர் நியமன அதிகாரியாக இருக்க வேண்டும். ஆனால் உதவி கணக்கு அலுவலருக்கு நியமன அதிகாரி கருவூல கணக்குத்துறை ஆணையர் ஆவார். எனவே இவ்விதிகள் பொருந்தாது.

மேலும், அடிப்படை விதிகளில் பின் இணைப்பு–2ல் பகுதிகள் பத்தி–29ல் கீழ்க்கண்டவாறு விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

"All Heads of Departments are empowered to appoint the JAO's working under them to hold additional charge of other posts and to sanction charge allowance subject to conditions prescribed in Rule-49" என உள்ளது. எனவே இவ்விதிகளும் பொருந்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இவருக்கு கூடுதல் பொறுப்பு பணி வழங்கியமைக்கு பின்ஏற்பு செய்ய இயலாது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்.ப.இராமதாஸ்,
ஆதிதிராவிடர் நல.இயக்குநருக்காக.

/ஆணைப்படி/

உ.கே.கஸ்தூரி 8/1/08
கண்காணிப்பாளர்.

8/1/08